# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

********

**முறையீட்டு மனு எண் 102 நு/2019**

**நாள் : 20/09 2019**

**திரு லெ. சேதுராமன்,**
**சாத்தூர் - 626 203.** — **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**சாத்தூர் நகராட்சி** — **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், தென்வடல் புதுத் தெரு, 54/117 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு லெ. சேதுராமன் அவர்களின் 01.07.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 102/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், தென்வடல் புதுத் தெரு, 54/117 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு லெ. சேதுராமன் என்பவர் தான் சாத்தூர் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணியாற்றி 31.03.2003 அன்று வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றதாகவும், தான் பணியாற்றிய காலத்தில் 01.06.1988 முதல் 31.05.1989 வரை 5-வது ஊதியக்குழு பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்ட நிலுவைத் தொகை சேமநல நிதி பதிவேட்டில் தனிக்கணக்கில் சேர்க்கப்பட்ட தொகை ரூ.3,817/- வட்டியுடன் சேர்த்து ரூ.54,667/- வழங்கப்பட ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையர் தனது 26.07.2019 நாளிட்ட கடிதத்தில் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் சாத்தூர் நகராட்சியில் பணி புரிந்த காலத்திற்கு சேமநல நிதிக்கு வட்டி கணக்கீடு செய்து விருது நகர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் உதவி இயக்குநர் வழியாக வட்டிப் பிரேரணை சரிபார்க்கப்பட்டு, சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குனரகத்திற்கு 07.11.2017 அன்று அனுப்பப்பட்டுள்ளதென்றும், வட்டித் தொகை அனுமதிக்கப்பட்டு தொகை நகராட்சிக்கு வரப்பெற்றவுடன் மனுதாரருக்குரிய வட்டித் தொகை வழங்கப்படும் என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 19.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனக்கு வழங்கப்படவேண்டியது 5-வது ஊதியக்குழுவின் நிலுவைத் தொகையேயன்றி சேமநல நிதி நிலுவைத் தொகை அல்ல என்று விசாரணையின் போது குறிப்பிட்டார்.

4. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. நகராட்சிப் பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய 60 சதவீத நிலுவைத் தொகை குறித்து 08.10.2007 நாளிட்ட நிதித்துறை

அரசாணை எண். 484 மற்றும் 13.08.2008 நாளிட்ட நிதித்துறை அரசாணை எண். 351–இல் உரிய தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலர் உதவி இயக்குநர் தனது 28.05.2016 நாளிட்ட கடிதம் எண். 17954/2016–இல் இதுபோன்ற நேர்வில் கீழ்க்காணும் விளக்கத்தினை அளித்துள்ளார் -

*"நகராட்சிப் பணியாளர்களது வட்டி கோரும் வட்டிப் பிரேரணை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலிருந்து அனுமதி பெறாத பட்சத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்குரிய வட்டித் தொகையைக் கணக்கிட்டு நகராட்சிப் பொது நிதியிலிருந்து முன்பணத் தலைப்பின் கீழ் சேமநல நிதிக் கணக்கிற்கு மாற்றம் செய்து உரியவர்களுக்கு வட்டி வழங்கி விட்டு, பின்னர் இத்துறையிலிருந்து நகராட்சிப் பணியாளர்களுக்கு வட்டித் தொகை அனுமதிக்கப்பட்ட பின்னர் முன்பணத் தொகையை சரி செய்து கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது"*

மேலும், இதுபோன்ற வேறு ஒரு நேர்வில் நகராட்சி நிர்வாக ஆணையரக இணை இயக்குநர் (தேர்தல்) அவர்களும் தனது 26.12.2018 நாளிட்ட கடிதம் எண்.28940/2018/பி2–இல் 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகை வட்டியுடன் வழங்குவது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அவர்களின் 24.07.2018 நாளிட்ட கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரையின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்று சுமார் 16 ஆண்டுகளுக்கும் மேல் ஆகின்றன. நகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்ற அலுவலர்களை இவ்வாறு அலைக்கழிப்பது முறையல்ல. எனவே, இனியும் காலம் தாழ்த்தாது முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகை மற்றும் அதற்கான வட்டியினை உரிய முறையில் கணக்கிட்டு உரிய விதிகளின் படி வழங்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சாத்தூர் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 20–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

24.9.19

25/9/19

பெறுநர்

1. திரு. லெ. சேதுராமன்,
   எண்.54/117,தென்வடல் புதுத்தெரு,
   சாத்தூர் – 626 203.
   விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   சாத்தூர் நகராட்சி,
   விருதுநகர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி